**செய்தி வெளியீடு எண்: 807** **நாள் : 21.09.2010**

**<u>பத்திரிக்கைச் செய்தி</u>**

நீதிப் பேராணை மனு எண். 196 / 2001ல் இந்திய அரசு மற்றும் ஏனையோருக்கு எதிராக குடி உரிமைகளுக்கான பொது மக்கள் கூட்டமைப்பு தொடர்ந்த வழக்கின் விசாரணையில் 31.08.2010 அன்று உச்சநீதி மன்றம் பிறப்பித்த ஆணைக்கிணங்க கீழ்க்கண்ட பத்திரிக்கைச் செய்தி வெளியிடப்படுகிறது.

தமிழகத்தில் உள்ள ஏழை எளிய மக்கள் உட்பட அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் அத்தியாவசியப் பொருட்கள் பொது விநியோகத் திட்டம் மூலம், தட்டுப்பாடின்றி கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டும், புழக்கத்தில் உள்ள போலி குடும்ப அட்டைகளை களையும் பொருட்டும் தமிழக அரசின் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, அவ்வப்போது அறிவுரைகள் வழங்கி நடவடிக்கை எடுத்து வருகிறது. இருப்பினும், இன்னமும் போலி குடும்ப அட்டைகள் புழக்கத்தில் உள்ளதாக இத்துறையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. எனவே, போலி குடும்ப அட்டைகளை வைத்திருப்போர் அவற்றை உடனடியாக, அந்தந்த பகுதிகளைச் சார்ந்த உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அலுவலர்களிடம் அதாவது இவ்வறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து இரு வாரங்களுக்குள் ஒப்புவிக்குமாறு எச்சரிக்கப்படுகிறார்கள். தவறினால் அவர்கள் மீது அத்தியாவசியப் பண்டங்கள் சட்டம் 1955ன் கீழ் குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறார்கள்.

ஒம் /–

ஆணையாளர்
உணவு பொருள் வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை.

**வெளியீடு:–**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**